# அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

# ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :107/2017

தேதி : 01/10/2017

## நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபம் திறப்பு - கலை உலகிற்குக் கிடைத்த மாபெரும் கௌரவம்

## சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் அறிக்கை.

பத்மபூஷன், பத்மஸ்ரீ விருதுகள் பெற்ற நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 89வது பிறந்த நாளான இன்று துணைமுதல்வர் ஓபி எஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மணிமண்டபம் திறப்பு விழாவில் பங்கேற்றது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

இந்நிகழ்ச்சியில் நான் பேசும் போது தமிழ் திரை உலகம் சந்தித்து வரும் சவால்களையும், வியாபார ரீதியில் எதிர்கொள்ளும் தோல்விகளையும் பற்றி குறிப்பிட்டு, இதை சரி செய்வதற்கு தமிழக அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டேன். மணிமண்டபத்தை திறந்து வைத்து பேசிய துணை முதல்வர் திரையுலகத்தின் கோரிக்கைகளை ஆய்வு செய்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இந்தியா முழுவதும் ஜி எஸ் டி வரி நடைமுறைப்படுத்தப்பட்டு திரைப்படங்களுக்கு 28% விதிக்கப்பட்டதற்கு பிறகும், தமிழகத்தில் உள்ள கேளிக்கை வரி, 10 முதல் 20% வரை வசூலிப்பது திரைத் துறைக்கு கூடுதல் சுமையாக உள்ளது. ஏற்கனவே பணப்புழக்க தட்டுப்பாடு, தயாரிப்பாளர்களுக்கு வழங்கப்படும் கடன்களின் அதிகப்படியான வட்டி விகிதம் , வெளியிடப்படும் திரைப்படங்களின் நிச்சயமற்ற வெற்றி என்பது போன்ற சுமைகள் திரைப்படத்துறையை பாதித்துக்கொண்டிருக்கும்போது, மேலும் அதிகப்படியான சுமையை எதிர்கொள்வது இந்த துறையை சார்ந்த பலரின் வாழ்வை பாதிக்கும் இதனை கருத்தில் கொண்டு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

மேலும் திரைப்பட தயாரிப்பு செலவுகளை குறைப்பதற்கு நடிகர்களும் தங்களது பங்களிப்பாக, சம்பளத்தை குறைத்துக்கொண்டு, தயாரிப்பாளர்களுக்கு பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு நல்கி அவர்களுடன் சேர்ந்து நல்ல வெற்றியடையும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை - 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



இந்த மணிமண்டபத்தில் நிறுவப்பட்டுள்ள சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவச் சிலை ஏற்கனவே திரு கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது மெரினா கடற்கரைப் பகுதியில்

நிறுவப்பட்டத்தை நாம் அனைவரும் அறிவோம். அச்சிலையோடு திரு கருணாநிதி அவர்கள் பெயர்பொறித்த கல்வெட்டும் பதிக்கப்பட்டிருந்தது. இன்று அது நீக்கப்பட்டு மணிமண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. நடிகர் திலகத்திற்கும் அவரோடு கலையுலகில் நீண்ட நாள் பயணித்த கலைஞருக்கும் இருந்த ஆழமான நட்பையும் பாசத்தையும் நாடே அறியும். இருவரும் இரு வேறு அரசியல் பாதையில் பயணித்தாலும் அவர்கள் நட்பு இறுதிவரை உறுதியாக இருந்ததை நாம் அனைவரும் அறிவோம்.

மேலும் இன்றைய நிகழ்ச்சியில் சிவாஜி அவர்களின் குடும்பத்தின் சார்பில் திரு பிரபு அவர்கள் கேட்டுக்கொண்டது போல மீண்டும் திரு கருணாநிதி அவர்களின் பெயரை பதிப்பது, அரசியல் தாண்டிய ஒரு செயலாகவும், சிவாஜி குடும்பத்தின் உணர்வை மதிப்பது போலவும் கருதப்படும். இதனை கருத்தில் கொண்டு அரசாங்கம் மீண்டும் கலைஞரின் பெயரை பொறிக்க வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத்தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com